www.Padasalai.Net www.CBSEtips.in

**PAVITHRAN ACADEMY**

**இரண்டாம் பருவத் தேர்வு - 2023**

**வகுப்பு : 11** **தமிழ்** **மதிப்பெண்கள் : 90**

**பாடப்பகுதி : இயல் - 4, 5, 6 - மாதிரி வினாத்தாள்**

**பகுதி - I**

**பலவுள் தெரிக.** **14 × 1 = 14**

1 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல் ______

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

2. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை ________

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

3. நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை? _________

அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு

4. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? _________

அ) மொழிபெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி

ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

5. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக் குறிப்பு _________

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி

ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை

ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

6. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது _________

அ) காய் முன் நேர். ஆ) காய் முன் நிரை

இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

7. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து -------- நினை.

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

அ) முகக்குறிப்பை அறிந்தவரை

ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை

ஈ) சொல்லேர் உழவரை

8. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று ______

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

9. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல் ________

அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

10. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க

அ) விரியன் - 1) தண்டை

ஆ) திருகுமுருகு - 2) காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்

i) 3 4 2 1 ii) 3 1 4 2 iii) 4 3 2 1 iv) 4 1 3 2

11. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது. ________

அ) சிற்றிதழ் , குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

12. சரியானதைத் தேர்ந்தெடுக்க.

அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம் இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்

i) அ, ஆ, இ - சரி; ஈ-தவறு ii) ஆ, இ, ஈ - சரி; அ-தவறு

iii) அ, இ, ஈ - சரி; ஆ-தவறு iv) அ, ஆ, ஈ - சரி; இ-தவறு

13. பொருந்தாததைத் தேர்க.

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக

www.Padasalai.Net

வெளிவந்துள்ளன

ஆ) ஒவ்வொருநாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்

இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன

i) அ, ஆ ii) ஆ, இ iii) அ, இ iv) ஆ, ஈ

14. கூற்று 1 தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்

கூற்று 2 அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி ஈ) கூற்று இரண்டும் சரி

## பகுதி - II

## பிரிவு - அ

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** **3 × 2 = 6**

15. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

16. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்?
எண்ணுபவர்கள் யார்?

17. “ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்”

- இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

18. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

www.Padasalai.Net

பிரிவு - ஆ

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2 × 2 = 4**

19. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

20. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?

21. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

பிரிவு - இ

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி** **7 × 2 = 14**

22. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : வைகை

23. பொருள் கூறுக. அ) ஏமம் ஆ) மருந்துழைச் செல்வான்

24. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

அ) எழுத்து, சொல், __________ , யாப்பு, _________ .

4. எழுத்து , _________, சீர், தளை, _________ , தொடை

25. கலைச்சொல் தருக. அ) Myth ஆ) Document

26. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) அரும்பொருள் ஆ) பயமில்லை

27. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) மலிந்த ஆ) விடுத்தல்

28. இலக்கணக் குறிப்பு வரைக. அ) நனிஇகக்கும் ஆ) ஒழுகுநீர்

29. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும் ?

30. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**பகுதி - III**

**பிரிவு - அ**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2 × 2 = 4**

www.Padasalai.Net

31. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

32. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

33. “ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்” - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு - ஆ**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2 × = 4**

34. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

35. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள்; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை ?

**பிரிவு - இ**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** **3 × 4 = 12**

37. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டாகத் தந்து விளக்குக. **அல்லது**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

38. இலக்கியநயம் பாராட்டுக. மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.

“தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்

www.Padasalai.Net

வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ"


- கம்பர்

39. மெய்ப்புத்திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக. (பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித்தகுதி)

40. தமிழாக்கம் தருக.

The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, printmaking, photography, and other visual media. Music, theatre, film, dance, and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, art referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is "vague", but that it has had many unique, different reasons for being created.

41. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக மாற்றுக.




www.Padasalai.Net

**பகுதி - IV**

**நெடுவினா** **3 × 6 = 18**

42. மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. ( **அல்லது** )

தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

43. பௌத்தக் கல்வி , சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க. ( **அல்லது** )

'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

44. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக. ( **அல்லது** )

பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**பகுதி - V**

45. **மனப்பாடப் பாடல்** **4 + 2 = 6**

அ) அம்ம வாழி - எனத் தொடங்கும் பாடல்.

ஆ) செயல் - என முடியும் குறள்.

**சு.விவேக் M.A., M.PHIL., B.ED., முதுகலைத் தமிழாசிரியர், கரூர் மாவட்டம்**

**MAIL : vivekvicky20688@gmail.com**

www.Padasalai.Net